

கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதைக் கண்டித்து திருச்சி சிந்தாமணி அண்ணா சிலை அருகில் முன்னாள் அமைச்சர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கழகத்தினர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு திருச்சி சிதம்பரம் மஹால் திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் மாநகர செயலாளர் மதிவாணன், பகுதி செயலாளர்கள் மோகன், ராஜ் முகமது, நீலமேகம், மணிவேல், பாபு, மாவட்ட துணை செயலாளர்கள் லீலா வேலு, செங்குட்டுவன், மாநகர துணை செயலாளர்கள் நூர்கான், பொன் செல்லையா, துணை மேயர் திவ்யா, பொது குழு உறுப்பினர் மணிமேகலை, ராஜேஸ்வரன், கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் திரளாக இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர் .

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது!

# சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்!

## மாவட்ச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கணக்கானோர் கைது!

சென்னை,ஆக.5–

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னை கிழக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.



தஞ்சாவூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டக் கூட்டத்தில், பயிர் கடன் தள்ளுபடி, மேகதாது அணை விவகாரம், மேட்டூர் அணையில் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படாதது, காவிரி பிரச்சினையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்படாதது உள்ளிட்ட விவசாயிகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து கழகத் தலைவர் வழிகாட்டுதல் படி கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமை ஏற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பேசியதை திரித்துக் காட்டி, தமிழ்நாட்டு மக்களின் கவனத்தை முக்கிய பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பும் நோக்கில் அவர் மீது ஒன்பது(9) பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றதை கண்டித்து, சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர் கிழக்கு மற்றும் மேற்கு, துறைமுகம் கிழக்கு மற்றும் மேற்கு, எழும்பூர் வடக்கு மற்றும் தெற்கு, திரு.வி.க.நகர் வடக்கு மற்றும் தெற்கு, வில்லிவாக்கம் கிழக்கு மற்றும் மேற்கு, அம்பத்தூர் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்களில் மேயர் பிரியா ராஜன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, சொ.வேலு, வி. சுதாகர், செ.தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, கூ.பீ. ஜெயின், வே.வாசு, ஜோசப் சாமுவேல், டி.எஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ் மற்றும் நூற்றுக்கணக்கான கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் கைது செய்து, அந்தந்த பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு மாலை 7.00 மணிக்கு மேல் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட பின்னர், கழகத்தினர், "கழகத் தலைவர் தளபதியும், எங்கள் இளம் தலைவரும் சுட்டிக்காட்டும் பாதையில் வென்றிடுவோம், வென்றிடுவோம், "மீண்டு வருவோம், மீண்டும் வருவோம் என்ற முழக்கங்களை எழுப்பி என்றென்றும் கழகத் தலைவர் பாதையில் பயணிக்க உறுதியேற்றனர்.

### பாசிச த.வெ.க. அரசு எங்கள் இளைஞர் அணிச் செயலாளரைக் கைது செய்து

# தி.மு.க. எனும் மகத்தான இயக்கத்தை முடக்கிவிட முடியாது!

## கழக இளைஞர் அணி காட்டமான அறிக்கை!

**சென்னை, ஆக. 5–**

**பாசிச த.வெ.க. அரசு எங்கள் இளைஞர் அணிச் செயலாளரைக் கைது செய்து தி.மு.க. எனும் மகத்தான இயக்கத்தை முடக்கிவிட முடியாது என்று கழக இளைஞர் அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

இது குறித்து கழக இளைஞர் அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கழக இளைஞர் அணிச்செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்த பாசிச த.வெ.க அரசை வன்மையாக கண்டிக்கின்றோம்.

காவிரி பிரச்சினைக்காக நடந்த ஆர்ப்பாட்டத்தில் த.வெ.க. அரசு மீது, எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் முன்வைத்த எந்த விமர்சனங்களுக்கும் பதில் சொல்ல வக்கற்ற த.வெ.க. அரசு, பொய்வழக்கு போட்டு தன் கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறது.

எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் யார் பெயரையும் குறிப்பிடாமல் காவிரி பிரச்சினை குறித்து பேசியதை, 'ஆபாசமாகப் பேசினார்', 'இரட்டை அர்த்தத்தில் பேசினார்' என்று திரிப்பது யார்?

'வாயில நல்லா வந்துடும்', 'கவர்ச்சி காட்ட நான் என்ன ....வா?', ஒரு டேஷும் இல்லை' என்று ஆபாசமாகப் பேசித்தள்ளும் டேஷ் டேஷ் முதலமைச்சர், தன் சொந்த கட்சிக்காரரையே 'ஜட்டியுடன் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடிப்பேன்' என்று சொல்லும் அமைச்சர் ஜெகதீஸ்வரி, ராகுல் காந்தியையும் பிரியங்கா காந்தி மகளையும் ஆபாசமாக சித்திரித்த 'பலகட்சி மாறி' சி.டி.நிர்மல்குமார், நாள்தோறும் பாலியல் வழக்குகளில் கைதாகும் குற்றவாளிகளின் கூடாரமான த.வெ.க – இந்த கும்பல்தான் திடீர் 'ஆபாச எதிர்ப்பு போராளி'களாக அவதாரம் எடுத்திருக்கிறார்கள்.

**விஜய் என்ன ஒழுக்கக் காவலரா?**

சோபாமாடல் முதலமைச்சர் விஜய்யின் படங்களிலும் பாடல்களிலும் உள்ள இரட்டை அர்த்த வரிகள், ஆபாசக்காட்சிகளைத் தொகுத்தால் அது மாபெரும் ஆபாச குடோனாக இருக்குமே! அரசியலுக்கு வந்து கடைசிப்படம் என்று அறிவித்த திரைப்படத்திலும் வாய் கூசாமல் கெட்டவார்த்தை பேசிய விஜய்தான் ஒழுக்க காவலரா?

இதே விஜய்யை நேரடியாக ஒரு நடிகையுடன் இணைத்துப் பேசிய பா.ஜ.க மாநிலச்செயலாளர் நயினார் நாகேந்திரனுக்கு கண்டனம்கூட தெரிவிக்காத த.வெ.க. இப்போது எதிர்க்கட்சித் தலைவரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது.

**துப்பில்லாத பாசிச அரசு!**

'மேகதாது அணை கட்ட தமிழ்நாட்டின் ஒப்புதல் தேவையில்லை' என்று சொன்ன பா.ஜ.க அரசின் அமைச்சரைக் கண்டித்து, டெல்லிக்குப் போராடச் சென்ற விவசாயிகளைக் கைது செய்த மகாராஷ்டிரா காவல்துறையைக் கண்டித்து, தமிழ்த்தாய் வாழ்த்தைப் பின்னுக்குத் தள்ளி வந்தே மாதரத்தைத் திணிக்கும் ஆளுநர் ஒன்றிய அரசைக் கண்டித்து எல்லாம் போராடத் துணியாத த.வெ.க, எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக மட்டும் போராடுகிறது.

**நேற்று புகார், இன்று எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்ய அவசர முயற்சி!**

'குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து பாலியல்வன்முறைசெய்தகுற்றவாளிகளைக் காப்பாற்றியவர்' என்று பாதிக்கப்பட்ட பெண்ணே குற்றம்சாட்டியும் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது நடவடிக்கை எடுக்கத் துப்பில்லாத பாசிச த.வெ.க. அரசு, அவசர அவசரமாக எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்கிறது.

அரைநூற்றாண்டு உரிமைப்போராட்டத்தை பின்னுக்குத் தள்ளி காவிரி பிரச்சினையில் கையாலாகாத்தனமாக செயல்பட்ட த.வெ.க அரசின் மீது எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த எந்த குற்றச்சாட்டுகளுக்காகவது பதில் சொல்ல திராணி இருக்கிறதா?

**அச்சத்தில் கைது செய்த அரசு!**

நாளை தொடங்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பப்போகும் எந்த கேள்விக்கும் பதில் சொல்லமுடியாது என்ற அச்சத்தில் கைது செய்திருக்கும் பாசிச த.வெ.க. அரசே!

கைது நடவடிக்கைகளால் எங்கள் இளைஞர் அணிச் செயலாளரையோ திராவிட முன்னேற்றக்கழகம் என்னும் மகத்தான இயக்கத்தையோ முடக்கிவிட முடியாது.

எத்தனையோ கைதுகள், சிறைச்சாலை சித்திரவதைகள், ஒடுக்குமுறைகளைக் கண்ட இயக்கம் தி.மு.க.

பாசிச த.வெ.க. அரசை வீழ்த்தி ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவோம்!

இவ்வாறு கழக இளைஞர் அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது:

# ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயல்!

## ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஆக. 5 –

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததைக் குறித்து ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் அரசியல் பழிவாங்கலாகும்! என்று ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அவரது அறிக்கை வருமாறு:

மேகதாது – காவிரி உரிமைப் போராட்டத்தில் தோல்வியடைந்ததை மறைக்க பழிவாங்கும் அரசியலில் இறங்கியுள்ளதாக கூறப்படும் த.வெ.க. அரசின் அணுகுமுறையை



ஆதித்தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது!

கர்நாடக அரசு மேகதாது அணைத் திட்டத்தை முன்னெடுத்து, காவிரி நதிநீரில் தமிழ்நாட்டின் உரிமையை பறிக்க முயன்று கொண்டிருக்கும் இந்த ஆபத்தான நேரத்தில், தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் சக்திகளும் ஒன்றுபட்டு மாநில உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், காவிரி பிரச்சினையிலும் மேகதாது அணைத் திட்டத் திலும் தமிழ்நாட்டு மக்களின் உரிமையை உறுதி யாகப் பாதுகாக்கத் தவறியதை மறைக்க அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிவரும் தகவல்கள் மிகுந்த கவலையளி க்கின்றன. அதன் வெளிப்பாடாக, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ய முயற்சிப்பதாக வெளியாகும் தகவல்கள் கடும் கண்டனத்திற்குரியவை.

மக்களின் குடிநீர் உரிமை, விவசாயிகளின் வாழ்வாதாரம், காவிரி டெல்டாவின் எதிர்காலம் போன்ற உயிர் சார்ந்த பிரச்சினைகளில் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறும் அரசு, எதிர்க்கட்சித் தலைவர்களை கைது செய்து மௌனப்படுத்த முயல்வதாக தோன்றும் எந்த நடவடிக்கையும் ஜனநாயகத்தின் மீது நடத்தப்படும் நேரடி தாக்குதலாகவே பார்க்கப்படும்.

மேகதாது அணை என்பது வெறும் அணைத் திட்டமல்ல; அது தமிழ்நாட்டின் நீருரிமை, விவசாய உரிமை, வாழ்வுரிமை ஆகியவற்றின் மீது நடத்தப்படும் தாக்குதல். அந்த தாக்குதலைத் தடுக்க வேண்டிய அரசு, உரிமைக்காக குரல் கொடுப்பவர்களை அச்சுறுத்தும் பாதையில் சென்றால், அது வரலாறு மன்னிக்க முடியாத அரசியல் தவறாகப் பதிவாகும்.

பெரியார், அண்ணா, கலைஞர் உருவாக்கிய சமூகநீதி மற்றும் மாநில உரிமைப் போராட்ட மரபை காவல்துறை அடக்குமுறையால் அழிக்க முடியாது. அரசியல் எதிரியை கைது செய்து வெல்லலாம் என்று நினைப்பவர்கள் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றையும் ஜனநாயகத்தின் அடிப்படை மதிப்புகளையும் புரிந்துகொள்ளா தவர்கள்.

எனவே, உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்யும் முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும். அதற்குப் பதிலாக, மேகதாது அணைத் திட்டத்தை தடுக்கவும், காவிரி நீர் உரிமையை முழுமையாக நிலைநாட்டவும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து உறுதியான சட்ட, அரசியல் மற்றும் மக்கள் போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆதித்தமிழர் பேரவை ஜனநாயகத்திற்கும், சமூகநீதிக்கும், மாநில உரிமைக்கும், காவிரி நீர் உரிமைக்கும் உறுதியுடன் குரல் கொடுக்கும் என்பதை இத்தருணத்தில் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தி.மு.க. சட்டத்துறை முன்னாள் துணைச் செயலாளர் வழக்கறிஞர் ப. நம்பிச் செல்வன் உள்ளிட்ட கழக வழக்கறிஞர்கள் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைதைக் கண்டித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# கண்ணியம்...

"ஜட்டிய கழட்டி உள்ளேபோட்டு
கொன்னுப் புடுவேன்""

இது -மகளிர் மேம்பாடு மற்றும் சமூக
நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி...

"அந்த பையன்
சுந்தர் பிச்சை"
"அமெரிக்கா எடுத்த பிச்சை"

இது கல்வி
அமைச்சர் ராஜ்மோகன்..

பத்திரிக்கையாளரை
தூக்கிப்போட்டு மிதித்த
சோளிங்கர்
எம்எல்ஏ...

"டிவிகே
டிவிகே"ன்னு
பள்ளி
வளாகத்துக்குள் மாணவர்களை
கோஷம் போடவைத்து
மகிழ்ந்த
கனிமவளத்துறை அமைச்சர் பிரபு...

"கைபடாத சீடி"
பாட்டுப்போட்டுடீச்சர்களோடு கூடி நடனம்..

இது உயர்கல்வித்துறை அமைச்சர்
விஸ்வநாதன்..

"என்ன- டேஷ்க்கு"...

"வாயில
நல்லாவந்திடும்"...



"கொத்துப் பொரோட்டா"

"நல்லா வச்சு செஞ்சுவிடுங்க"

இதெல்லாம்- மாண்புமிகு
"முதலமைச்சர்
விஜய்...

குறிப்பு...

கண்ணியமா
பேசலைன்னு

"கண்டன
ஆர்ப்பாட்டத்தை
கண்டித்து"
கண்டன
ஆர்ப்பாட்டம் ...

இப்படிக்கு
தவெக...

அம்புட்டுத்தான்



மருது அழகுராஜ்
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்